

கழகத் தலைவரும் – தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (15.4.2026) காணொலிக் காட்சி வாயிலாக ஒன்றிய பா.ஜ.க. அரசு நாளை நாடாளுமன்றத்தில் தொகுதி மறுவரையறை தொடர்பாக கொண்டு வரப்போகும் சட்டத் திருத்தத்திற்கு எதிர்ப்பை தெரிவித்து கருப்புக் கொடி ஏற்றுவது குறித்து கழக மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கழக பொதுச் செயலாளர் – அமைச்சர் துரைமுருகன், கழக பொருளாளர் – நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, கழக முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு, துணை பொதுச் செயலாளர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவரும் – தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (15.4.2026) தருமபுரியில், ஐ.என்.ஏ. சபையின் அருட்தந்தை பிலிப் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, கிறிஸ்தவ பெருமக்களின் நல்வாழ்விற்காக பல்வேறு நலத்திட்டங்களை கழக அரசு செயல்படுத்தியமைக்காக நன்றி தெரிவித்து, சட்டமன்ற பொதுத்தேர்தலில் கழக கூட்டணிக்கு தங்கள் ஆதரவினை தெரிவித்தனர். உடன், தருமபுரி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி, கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் முன்னாள் அமைச்சர் பழனியப்பன், பாலக்கோடு சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் டாக்டர் டி.என்.வி.செந்தில்குமார் ஆகியோர் உள்ளனர்.



கழகத் தலைவரும் – தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (15.4.2026) தருமபுரியில், அனைத்து வணிகர் சங்கத் தலைவர் துரைராஜ் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, வணிகர் பெருமக்களின் நல்வாழ்விற்காக பல்வேறு நலத்திட்டங்களை கழக அரசு செயல்படுத்தியமைக்காக நன்றி தெரிவித்து, சட்டமன்ற பொதுத்தேர்தலில் கழக கூட்டணிக்கு தங்கள் ஆதரவினை தெரிவித்தனர். உடன், தருமபுரி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி, கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் முன்னாள் அமைச்சர் பழனியப்பன், பாலக்கோடு சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் டாக்டர் டி.என்.வி.செந்தில்குமார் ஆகியோர் உள்ளனர்.

### திருப்பூர் மத்திய – கிழக்கு – வடக்கு – தெற்கு மாவட்டக் கழக கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து

# திருப்பூரில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் பிரச்சாரம்!

### மாவட்டச் செயலாளர்கள் க.செல்வராஜ் – இல.பத்மநாபன் – பொறுப்பாளர்கள் என்.தினேஷ்குமார் – கே.ஈஸ்வரசாமி அறிக்கை!



திருப்பூர், ஏப். 17–

திருப்பூர் மத்திய, கிழக்கு, வடக்கு, தெற்கு மாவட்டங்களைச் சேர்ந்த கழக மற்றும் கூட்டணி இயக்கத்தின் வேட்பாளர்களை ஆதரித்து, கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் திருப்பூரில் பிரச்சாரம் செய்ய உள்ளார்.

இதுகுறித்து திருப்பூர் மத்திய மாவட்டச் செயலாளர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ., திருப்பூர் கிழக்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், திருப்பூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், மாநகராட்சி முன்னாள் மேயர் என். தினேஷ்குமார், திருப்பூர் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் கே.ஈஸ்வரசாமி எம்.பி., ஆகியோர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிப்பதாவது :–

18.04.2026 சனிக்கிழமை அன்று சரியாக மாலை 5.00 மணிக்கு, திருப்பூர், யூனியன் மில் சாலையில் அமைந்துள்ள ரீ சக்தி திரையரங்கம் அருகில் அமைந்துள்ள கலைஞர் திடலில் திருப்பூர் மத்திய கிழக்கு வடக்கு தெற்கு மாவட்டங்களைச் சேர்ந்த கழக மற்றும் கூட்டணி இயக்கத்தின் வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது.

பொதுக்கூட்டத்திற்கு மேற்கு மண்டல பொறுப்பாளர், கோவை தெற்கு சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி தலைமை வகிக்கிறார்.

காங்கேயம் சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர், கழக துணை பொதுச் செயலாளர், அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் காங்கேயம் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் மு.பெ.சாமிநாதன், பல்லடம் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் க.செல்வராஜ், திருப்பூர் தெற்கு சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் ந.தினேஷ்குமார், திருப்பூர் வடக்கு சட்டமன்றத் தொகுதி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் எம்.ரவி (எ) சுப்பிரமணியன், அவிநாசி சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் டாக்டர் கோகிலா மணி, தாராபுரம் சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் டி.இந்திராணி, மடத்துக்குளம் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் இரா.ஜெயராமகிருஷ்ணன், உடுமலைப்பேட்டை சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் மு.ஜெயக்குமார் ஆகியோரை ஆதரித்து, தேர்தல் பிரச்சாரம் செய்கிறார்.

தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் திருப்பூர் மத்திய கிழக்கு வடக்கு தெற்கு மாவட்ட கூட்டணி இயக்கத்தைச் சேர்ந்த காங்கிரஸ், திராவிடர் கழகம், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், தே.மு.தி.க., சி.பி.எம்., சி.பி.ஐ., இந்திய யூனியன் முஸ்லீம் லீக், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, மனித நேய மக்கள் கட்சி, மக்கள் நீதி மைய்யம், எஸ்.டி.பி.ஐ., கொங்கு மக்கள் தேசியக் கட்சி, தமிழ்நாடு முன்னேற்றக் கழகம், இந்திய குடியரசுக்கட்சி, ஆதித்தமிழர் பேரவை, தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் கட்சி, தந்தைப் பெரியார் திராவிடர் கழகம், தலித் விடுதலை இயக்கம், தமிழ்ப் புலிகள் கட்சி, சமத்துவ மக்கள் கழகம், ஆதித் தமிழர் கட்சி உள்ளிட்ட கூட்டணி இயக்க நிர்வாகிகள் கலந்து கொள்கிறார்கள்.

தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் திருப்பூர் மத்திய கிழக்கு வடக்கு தெற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், தொகுதி பொறுப்பாளர்கள் மற்றும் மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளை வட்டக் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கலந்து கொள்ள உள்ளார்கள்.

நிறைவாக திருப்பூர் தெற்கு மாநகர கழக செயலாளர் டிகேடி மு.நாகராசன் நன்றி கூறுகிறார்.

இவ்வாறு தங்களது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

### தலைக்கு மேல் தொங்கிய கத்தி கழுத்துக்கு வந்துவிட்டது!

# ஜனநாயகத்தைக் காக்க ஓரணியில் திரள்வீர்!

### நாடாளுமன்ற கழக உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!

சென்னை, ஏப். 17–

"தலைக்கு மேல் தொங்கிய கத்தி கழுத்துக்கு வந்துவிட்டது. எனவே அனைத்து அரசியல் கட்சியினரும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஜனநாயகத்தைக் காக்க ஓரணியில் திரள வேண்டும்'' என்று கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நாடாளுமன்ற கழக உறுப்பினர்களுடன் காணொலிக் காட்சி வாயிலாக நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் வலியுறுத்தினார்.

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:–

**தலைக்கு மேல் தொங்கிய கத்தி கழுத்துக்கு வந்துவிட்டது!**

**நாடு முழுக்க உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களை ஒருங்கிணைத்து இந்த பேராபத்தை எதிர்கொள்வதற்கான வியூகங்கள் குறித்து கழக நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் ஆலோசித்துள்ளேன்.**

**தனிப்பட்ட மனிதர்கள் அரசியல் இயக்கங்களைவிட, மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதுதான் நமது தலையாய கடமை.**

**எனவே, அனைத்து அரசியல் இயக்கங்களைச் சார்ந்த தோழர்களும் - நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஜனநாயகத்தைக் காக்க ஓரணியில் திரள வேண்டும் என அழைக்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

### திருப்பூர் கிழக்கு மாவட்டம், காங்கேயம் – தாராபுரம் சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர்களை ஆதரித்து

# கழக இளைஞர் அணி செயலாளர் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாக்கு சேகரிக்கிறார்!

### மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன் அறிக்கை!



*திருப்பூர், ஏப். 17–*

*மதச்சார்பற்ற ஜனநாயக முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் திருப்பூர் கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட காங்கேயம் தாராபுரம் சட்டமன்ற தொகுதிகளில் போட்டியிடும் கழக வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரம் செய்ய கழக இளைஞர் அணி செயலாளர் - தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வருகை குறித்து திருப்பூர் கிழக்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன் அறிக்கை விடுத்துள்ளார்.*

*அதன் விவரம் வருமாறு:*

*கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (17-04-2026 வெள்ளிக்கிழமை) காலை 09.00 மணியளவில் காங்கேயம் பேருந்து நிலையம் ரவுண்டானா அருகில் காங்கேயம் சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர், கழக துணை பொதுச் செயலாளர், அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தாராபுரம் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் டி.இந்திராணி ஆகியோரை ஆதரித்து பிரச்சாரம் செய்யவுள்ளார்கள்.*

*அதுசமயம் மாவட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக, கிளை கழக இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளை கழக, வார்டு கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், பாக முகவர்கள் (BLA-2) BDA, BLC, முன்னாள், இந்நாள் உள்ளாட்சி மன்ற உறுப்பினர்கள், பிரதிநிதிகள், திருப்பூர் கிழக்கு மாவட்ட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சியின் மாநில, மாவட்ட, வட்டார, ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு தலைவர்கள், செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கூட்டத்தில் கலந்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.*

*இவ்வாறு திருப்பூர் கிழக்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் தனது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.*

# நாடாளுமன்றத் தொகுதி மறுசீரமைப்பு பிரச்சினை:
# சந்திரபாபு நாயுடுவின் கருத்து என்ன?

**க**டந்த ஆண்டு மார்ச் மாதம் தமிழகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தென்மாநில முதல்வர்களின் கூட்டத்தைக் கூட்டி நாடாளுமன்றத் தொகுதி மறுசீரமைப்பு குறித்து விவாதித்தார்.

அப்போது சந்திரபாபு நாயுடு “இப்போது அதற்கு என்ன அவசரம்? அந்தச் சமயம் வரும்போது பார்க்கலாம்" என்ற கருத்துபட வெளியில் இருந்து தனது அபிப்ராயத்தை வெளியிட்டு இருந்தார். இது ஏடுகளில் வெளிவந்தது.

இப்போது அவரைத் தவிர எல்லோருடைய கருத்துகளும் நாளேடுகளில் வெளியாகி இருக்கின்றன. தென் மாநிலங்களின் கருத்துகள் ஒரே மாதிரியாக இருக்குமானால் நல்லதல்லவா?

சந்திரபாபு நாயுடுதான் ஒன்றிய பா.ஜ.க. அரசு விழாமல் காக்கும் தூண்களில் ஒன்றாக இருக்கிறார். இப்போது மறுசீரமைப்பு குறித்து அவர் கருத்து சொல்லலாமே!

குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை அமல்படுத்தியதால் தென் மாநிலங்கள் மக்கள் தொகையில் பின்னடைவை பெற்றுவிட்டன. இதனால், தென் மாநில நாடாளுமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கை குறையுமல்லவா?

வட மாநிலங்களுக்கு அந்த நிலை இல்லை, அவை குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை அமல்படுத்தவில்லை!

**சந்திரபாபு நாயுடுவின் கருத்து என்ன?**

**– க. திருநாவுக்கரசு**

### குன்னூர் வெலிங்டன் கன்டோன்மென்ட் பகுதியில்

# தி.மு.க. வேட்பாளர் கே.எம்.ராஜு தீவிரப் பிரச்சாரம்!

### கொறடா கா.ராமச்சந்திரன் – கூட்டணி நிர்வாகிகள் உடனிருந்தனர்!

*நீலகிரி, ஏப். 17-*

*குன்னூர் வெலிங்டன் கன்டோன் மென்ட் பகுதியில் வேட்பாளர் கே.எம். ராஜு தீவிரப் பிரச்சாரம் மேற்கொண்டார்.*

*பிரச்சாரத்திற்கு இன்னும் 7 நாட்களே உள்ள நிலையில், தற்போது நீலகிரி மாவட்டத்தில் தி.மு.க. கூட்டணியில் போட்டியிடும் வேட்பாளர் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். குன்னூர் சட்டமன்றத் தொகுதியில் தி.மு.க. சார்பில் போட்டியிடும் கேஎம். ராஜு தினமும் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார். அனைத்து குக்கிராமங்களுக்கும் நேரடியாக சென்று வாக்கு சேகரித்து வருகிறார்.*

*இந்நிலையில், நேற்று குன்னூர் பகுதியில் உள்ள வெலிங்டன் பஜார், போகி தெரு. ஜெயந்தி நகர், நல்லப்பன் தெரு, அண்ணா நகர், பாய்ஸ் கம்பெனி ஆகிய பகுதிகளில் வாக்கு சேகரித்தார்.*

*அப்போது, அவர் பேசியதாவது: தமிழகமுதல்வர் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து தரப்பு மக்களும் முன்னேற்றம் அடைய வேண்டும் என்பதற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். குறிப்பாக, மகளிர் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். கலைஞர் உரிமைத் தொகை திட்டத்தின் கீழ் மகளிருக்கு இதுவரை ரூ. 1000ம் வழங்கப்பட்டு வந்த நிலையில், மீண்டும் ஆட்சிக்கு வந்தால், ரூ.2 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும் என தெரிவித்துள்ளார்.*

*எனவே, தமிழ்நாட்டில் உள்ள மகளிர் தங்களுக்கு தேவையான செலவுகளை கவனித்து கொள்ள இந்த தொகை மிகவும் பயன் உள்ளதாக அமையும். மேலும், தற்போது தேர்தல் வாக்குறுதியாக அனைத்து பெண்களுக்கும் ரூ.8 ஆயிரத்திற்கான கூப்பன்கள் வழங்கப்படும் என தெரிவித்தார். இந்த கூப்பன்கள் மூலம் பெண்கள் அருகில் உள்ள கடைகளுக்கு சென்று தங்களுக்கு தேவையான பொருட்களை வாங்கி கொள்ளலாம்.*

*எனவே. மீண்டும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டா லின், முதல் அமைச்சராக பொறுப்பேற்றால், தேர்தல் வாக்குறுதிகளில் கூறியது மட்டுமின்றி. பல்வேறு புதிய திட்டங்களையும் தமிழக மக்களுக்காக அறி விப்பார்.*

*இவ்வாறு அவர் பேசினார்.*

*ஒசட்டி கிடங்கு, ஒதனட்டி, ஜெகதளா, காரக்கொரை, தொடர்ந்து அவர், பஸ் கம்பெனி இந்திரா நகர், மருத்துவமனை பகுதி, சிங் காரா தோப்பு, லூர்து புரம், பாபுவில்லேஜ், சின்ன வண் டிச்சோலை, அருவங்காடு. பாலாஜி நகர், அட்டுக்கொரை, பிக்கட்டி மற்றும் சின்னபிக்கட்டி உட்பட கிராமங்களிலும் தீவிர பிரசாரம் மேற்கொண்டார். இந்த பிரசாரத்தின் போது, அரசு கொறடா ராமசந்திரன், அவைத்தலைவர் போஜன், கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த பெள்ளி,கன்டோன்மென்ட் நகர செயலாளர் மார்டின், ஜெகதளா பேரூர் நிர்வாகி சஞ்சிவ், ஒன்றிய செயாளர் பிரேம்குமார் உட்பட தி.மு.க. மற்றும் தோழமைக் கட்சி நிர்வாகி கள் பலர் உடன் இருந்தனர்.*



பாலக்கோடு பகுதியில் கழக வேட்பாளர் டாக்டர் செந்தில்குமார் கூட்டணி நிர்வாகிகளுடன் வாக்குசேகரித்தார்.